


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | ஜூலை 15, 2021 | புரட்சி 20 | முழக்கம் 20 | விலை: ரூ.3.00


## உயர்நீதிமன்றத்தில் கழகத் தலைவர் மனு

# நீட் வழக்கு : திராவிடர் விடுதலைக் கழகமும் இணைந்துக் கொண்டது

**நீட்டின் பாதிப்புகள் குறித்து ஆராய தமிழக அரசு நியமித்துள்ள முன்னாள் நீதிபதி ஏ.கே. ராஜன் குழு – சட்டத்துக்கு எதிரானது என்று தமிழக பா.ஜ.க. சார்பில் அதன் செயலாளர்களில் ஒருவரான கரு. நாகராஜன், சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தன்னையும் எதிர் மனுதாரராக இணைத்துக் கொண்டுள்ளார். வழக்கறிஞர் திருமூர்த்தி, ஜூலை 9, 2021 அன்று உயர்நீதி மன்றத்தில் இந்த ‘இடையீட்டு’ மனுவை தாக்கல் செய்தார். மனுவில் அடங்கியுள்ள முக்கிய கருத்துகளின் சுருக்கமான தொகுப்பு.**

- மாணவர்கள் - பெற்றோர்கள் மற்றும் பெரும்பான்மை பொது மக்களிடையே எதிர்ப்புணர்வுகளை உருவாக்கக்கூடிய ஒரு பிரச்சினையில் அது குறித்து கருத்துகளை கேட்கவும், ஆதாரங்களை திரட்டுவதுமான அரசின் செயல்பாடுகள், அரசின் கொள்கை முடிவுகளைச் சார்ந்த தாகும். நாடாளுமன்றம் ஒரு சட்டத்தை நிறைவேற்றும்போது அந்த சட்டம் மாநிலங்களோடு தொடர்புள்ள நிலையில் மாநில அரசு, அந்த சட்டம் குறித்து மக்களின் கருத்துகளைக் கேட்கும் கொள்கை முடிவுகளை சட்டத்தை ஏற்க மறுப்பதாகவோ சட்ட எதிர்ப்பாகவோ கருதிவிட முடியாது.

- ஏ.கே.ராஜன் குழுவை நியமித்து தமிழக அரசு பிறப்பித்துள்ள ஆணையின் நோக்கம் என்ன? ஒரு மக்கள் நல அரசு தனக்கும், மக்களுக்கும் இடையிலான ‘தூதுவராக’ செயல்படுகிறது என்பதே இந்த ஆணையின் உள்ளடக்கம். இந்த குழு மக்களின் கருத்துகளைக் கேட்டு வருகிறது. அது நீட் தேர்வுக்கு ஆதரவாக இருக்கலாம்; அந்தத் தேர்வு தேவை இல்லை என்பதாகவும் இருக்கலாம். இரு தரப்பு கருத்துகளையும் பதிவு செய்யும் இந்தக் குழுவின் செயல்பாட்டை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிரானது; சட்ட விரோதமானது என்று எப்படி முடிவுக்கு வர முடியும்?

- பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்று, நீட் தேர்வில் தேர்ச்சி பெறவியலாத காரணத்தால் பல மாணவ மாணவியர்கள் தற்கொலை செய்து கொண்ட துயரமான நிகழ்வுகள் தமிழ்நாட்டில் நிகழ்ந்துள்ளன. இந்த நிலையில் மாணவர்கள் ஏன் இந்த முடிவுக்கு தள்ளப்பட்டார்கள்? அவர்களின் உளவியல் பிரச்சினை என்ன? இதைத் தவிர்க்க தன்னம்பிக்கையை வளர்த்தெடுப்பதற்கு எத்தகைய முயற்சிகள், திட்டங்கள் தேவைப்படுகின்றன? சட்டரீதியாக எதிர்காலத்தில் கல்விப் புலத்தில் எதைச் செய்ய வேண்டும் என்பதை ஆராயவே தமிழக அரசு இந்தக் குழுவை நியமித்திருக்கிறது.



**“ஒரு மக்கள் நல அரசு நாடாளுமன்ற சட்டத்தின் மீது மக்கள் கருத்துகளைக் கேட்கும் கடமைக்குரியது; இது கொள்கை முடிவு.”**

- ஒன்றை வலியுறுத்திக் கூற வேண்டும். சுகாதாரம் மாநில அரசு உரிமையின் கீழ் தான் வருகிறது. இந்த நிலையில் மருத்துவக் கல்வியை சுகாதாரத் துறையில் இருந்து எப்படித் தனியே பிரித்துப் பார்க்க முடியும்? இவை இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தவை தான்.

- விசாரணைக் குழுவை நியமித்துள்ள தமிழக அரசு, அதன் விசாரணை வரம்புகளிலேயே இதைத் தெளிவுப்படுத்தியிருக்கிறது. ‘நீட்’ தேர்வு அடிப்படையில் கடந்த காலத்தில் நடந்த மாணவர் சேர்க்கை, அவர்களிடையே பாதிப்புகளை உருவாக்கியிருக்கிறதா? அப்படிப் பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்தால் எத்தகைய பாதிப்புகள்? இந்த பாதிப்புகளை சரி செய்வதற்காக அனைத்து மாணவர்களும் பயன்பெறக் கூடிய மாற்று வழி முறைக்கான ஆலோசனைகள் இருக்கிறதா? அந்த ஆலோசனைகள் எவை? நேர்மையான அனைவருக்கும் நீதி வழங்கக் கூடியதாக இருக்க வேண்டிய அந்த ஆலோசனைகளை சட்டப்பூர்வமாக செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் என்ன? என்பதுதான் விசாரணைக் குழுவுக்கு தமிழக அரசாணை விதித்துள்ள வரம்பு. இது எந்த வகையிலும் நாடாளுமன்ற சட்டத்துக்கோ உச்சநீதிமன்றத்துக்கோ எதிரானது அல்ல.

- 3.1.1977இல் ‘கல்வி’ மாநில உரிமையிலிருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டாலும் பொதுப் பட்டியலில் உள்ள பிரச்சினை ஒன்றிய அரசுக்கு மட்டுமே உரிமையானது என்று தவறுதலாகக் கருதப்படுகிறது. மாநில அரசுக்கும் அதில் உரிமை உண்டு. ஒன்றிய அரசுக்கு மட்டுமே உரிமை என்ற கண்ணோட்டத்தில் தன்னிச்சையாக ஒன்றிய அரசு மட்டுமே சட்டம் இயற்ற முடியாது. தமிழ்நாடு அரசேகூட மருத்துவப் பட்டப் படிப்பு மற்றும் பல் மருத்துவப் பட்டப் படிப்பில் தமிழ் நாட்டுக்கு விதிவிலக்கு கேட்டு 2017ஆம் ஆண்டு சட்ட மன்றத்தில் (TNLA Bill No.7, of 2017 etc.) சட்டம் நிறை வேற்றியிருப்பதை சுட்டிக்காட்ட வேண்டும்.

- ‘தேசிய மருத்துவ ஆணைய’ சட்டத்தையும் ஒன்றிய அரசு ஒத்திசைவுப் பட்டியல் தனக்கு மட்டும் அதிகாரம் தருகிறது என்ற கண்ணோட்டத்தில் பல்கலைக் கழகக் கட்டுப்பாடுகளை தனது முழு உரிமையாக்கி சட்டம் இயற்றியிருக்கிறது. இந்த நிலையில் மருத்துவ ஆணையத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்ட பல்கலைக் கழகங்களில் விளிம்பு நிலை ஏழை மாணவர்களுக்கு - குடிசையிலிருந்து படிக்க வரும் மாணவர்களுக்கு வாய்ப்புகள் கிடைக்கிறதா என்பதை ஆராய்வதற்கு ஒரு மக்கள் நல அரசு கடமைப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையிலேயே தமிழக அரசு இந்தக் குழுவை நியமித்துள்ளது. இதன் வழியாக ஒரு மக்கள் நல அரசு தனக்கான கடமையை நிறைவேற்ற முன் வந்திருக்கிறது. நீதி அனைவருக்கும் கிடைக்கிறதா என்ற கொள்கைப் பார்வையில் ஒரு அரசு எடுக்கும் கொள்கை ரீதியிலான இந்தச் செயல்பாடு எப்படி சட்ட விரோதமாகும்?

- ஏழைகளிலும் ஏழைகளாக இருப்போருக்கு சமூகநீதி சென்றடைய வேண்டும் என்பது தான் அரசியல் சட்டத்தின் வழியாக வழங்கப்பட்டுள்ள ‘இறையாண்மை’க்கான அர்த்தம். வெவ்வேறு கல்வி நிறுவனங்கள் தேர்வுகளில் மாணவர்கள் அதிக மதிப்பெண்களைப் பெறுவதற்கு மாணவர்களை தயார் செய்ய வெவ்வேறு கற்பிக்கும் முறைகளைப் பின்பற்றுகின்றன என்பதாலேயே தேர்வுகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதை நியாயப்படுத்த முடியாது.

- 3.1.1977இல் கல்வி பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டபோது அப்போது நாடாளுமன்றம் அதற்காகக் சட்டம் ஏதும் இயற்றவில்லை. தமிழ்நாடு சட்டமன்றம் நீட்டிலிருந்து விதிவிலக்கு கேட்டு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு தான், ஒன்றிய அரசு, நாடாளுமன்றத்தில் (புதிய) சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தச் சட்டம்கூட செல்லத் தக்கதா என்பது குறித்து உரிய நேரத்தில் வழக்குகளை எதிர் நோக்கலாம்.

- தமிழ்நாடு அரசு தொடர்ச்சியாகவே சட்ட ரீதியான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஏதோ இந்தக் குழு அமைப்பு முதல்முறையாக உச்சநீதிமன்றத்துக்கோ சட்டமன்றத்துக்கோ எதிர்ப்பு தெரிவிக்க அமைக்கப்பட்டதாகக் கருதிவிட முடியாது. ஏற்கனவே தமிழக அரசு எடுத்த முயற்சிகள் வெற்றி பெற முடியாமல், அதன் பலனை பாதிக்கப்பட்டோருக்குக் கிடைக்காமல் ஒன்றிய அரசால் தடுக்கப் பட்டு விட்டன. இதன் காரணமாகவே தமிழக அரசு அடுத்த நடவடிக்கைகளை மேற் கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. அதுவே இந்தக் குழுவை உருவாக்கியதன் நோக்கம். உச்சநீதி மன்றத்தையோ, சட்டத்தையோ எதிர்ப்பதற்கு அல்ல.

- அரசியல் சட்டம் வழங்கியுள்ள உரிமைகளுக்கு உட்பட்டே தமிழக அரசு இந்த விசாரணைக் குழுவை நியமித்திருக்கிறது.

- என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தலையங்கம்

## ‘திராவிடன் மாடல்’

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், நிதி நிலை அறிக்கை தயாரிப்புக்கு முன்னோட்டமாக துறை ரீதியான ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறார். நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் முடிப்பதற்கான காலக்கெடு மற்றும் பொறுப்பேற்புகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. பட்டியல் இனப் பிரிவு மற்றும் பழங்குடியினருக்கான நிரப்பப்படாத பணியிடங்களை நிரப்புவதற்கும் ஆக்கிரமிக்கப்பட்ட பஞ்சமி நிலத்தை மீட்டு பட்டியலினப் பிரிவினரிடம் வழங்குவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ள முதல்வர் முனைப்பு காட்டியிருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். சுமார் 5 இலட்சம் கோடி கடன் சுமையால் நிர்வாகத்தை சீரழித்துள்ள கடந்தகால அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, 35 சதவீத பணியிடங்களை ஊதியம் தர இயலாமையால் நிரப்பப்படாமலேயே விட்டுச் சென்றிருக்கிறது. தமிழக நிதித் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் இதைத் தெரிவித்திருக்கிறார். நிதிநிலை அறிக்கைக்கு முன்பு தமிழக அரசின் நிதி நிலை குறித்து நிதியமைச்சர் தாக்கல் செய்யவிருக்கும் வெள்ளை அறிக்கை தமிழக அரசின் மோசமான நிதி நிலையை வெளிச்சத்துக்குக் கொண்டு வரும் என்று நம்பலாம்.

தமிழக அரசின் எதிர்கால இலக்குகளை தெளிவாக வரையறுத்த தமிழக முதல்வர், தமிழக அரசுக்கு ஆலோசனை கூற நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச பொருளாதார நிபுணர்களைக் கொண்ட அய்வர் குழுவினரிடம் காணொளி வழியாக நிகழ்த்திய உரை மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. ஆய்வாளர் ஜீன்டிரீஸ், நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென்னுடன் இணைந்து எழுதிய நூலில், தமிழ்நாட்டின் வலிமையான கட்டமைப்புக்குக் கூறப்பட்ட காரணங்களை பட்டியலிட்டுள்ளார். 1920களில் பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கம் உருவாக்கிய தாக்கம், பட்டியலினப் பிரிவினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு கிடைத்த அதிகாரம், மனித வளம், ஆக்கப்பூர்வமான பெண்ணுரிமை இயக்க செயல்பாடுகள் தமிழகத்துக்கு வலிமையான கட்டமைப்புகளை வழங்கியிருப்பதை முதல்வர் மு.க. ஸ்டாலின் எடுத்துக் காட்டி, ‘திராவிடன் மாடல்’ என்ற சொற்றொடரையும் வழங்கியிருக்கிறார்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி தொழில் வளர்ச்சி, தொழில் முதலீடு, தனி நபர் வருவாயை குறியீடுகளாக அடையாளம் காணப்பட்டு வந்தது. அது உண்மையான வளர்ச்சியின் குறியீடு அல்ல. அனைத்துப் பிரிவினரையும் உள்ளடக்கிய சமூக நீதி, சமத்துவம், சுயமரியாதை என்பதே சரியான அளவுகோல் என்ற கருத்தை, ஏற்கனவே தமிழக வளர்ச்சிக்கான பொருளாதார ஆய்வுக் குழுக் கூட்டத்தில் பேசும்போது தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் சுட்டிக் காட்டியதையும், இணைத்துப் பார்க்க வேண்டும்.

1936இல் நிறுவப்பட்ட ‘டாட்டா சமூக விஞ்ஞான நிறுவனம்’ தொடர்ந்து பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. மண்டல் அறிக்கை உருவாக்கத்திலும் சமூக விஞ்ஞானம் குறித்த ஆய்வுகள் மற்றும் தரவுகளை வழங்கிய பெருமை இந்த நிறுவனத்துக்கு உண்டு. இந்தியாவில் சமூகம் குறித்த ஆய்வுகள் - மறுவரையறை செய்யப்பட வேண்டும் என்று அண்மையில் இந்த நிறுவனம் வலியுறுத்தி வருகிறது.

இந்தியாவில் சமூகம் ஜாதிக் குழுக்களாகப் பிரிந்து வாழ்கிறது. சமூகக் குழுக்களின் சமூக நிலை பொருளாதாரம், அரசியல், அவர்கள் வாழும் பகுதிகளைச் சார்ந்து தீர்மனிக்கப்படுகிறது. எனவே ஒவ்வொரு குழுவையும், வாழும் இடம், அரசியல் சார்ந்து பகுப்பாய்வு செய்து, அந்தந்தக் குழுக்களுக்கான தனித்தனிப் பிரச்சினைகளைக் கண்டறிந்து அந்தக் கண்ணோட்டத்தில் வளர்ச்சித் திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று டாட்டா சமூக விஞ்ஞான நிறுவனத்தின் இயக்குநர் எஸ். பரசுராமன் விரிவாக விளக்கியிருக்கிறார்.

தொழில் வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, நகரமயமாதல் என்ற கோட்பாடுகளை அரசுகள் முன்வைத்து வளர்ச்சியைப் பேசுவதோடு, உற்பத்தி உறவுகளின் கட்டுப்பாடு அரசிடம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கருத்துகளும் முன் வைக்கப்படுகின்றன. உண்மை நிலவரம் என்னவென்றால் உலகின் 99 சதவீத சொத்துக்கள் ஒரு சதவீதப் பேரிடம் மட்டுமே குவிந்திருப்பதை அந்த ஆய்வாளர் சுட்டிக் காட்டுகிறார். விளிம்பு நிலை சமூகக் குழுக்களை அடையாளம் கண்டு, அவர்களை சமூக பொருளாதார, கல்வி நிலைகளில் அதிகாரப்படுத்துவதற்கான அரசின் முதலீடுகளும் திட்டங்களுமே பல்வேறு இனம், பண்பாடு, மொழிகளை உள்ளடக்கிய ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கான பாதையாக இருக்கும் என்ற புரிதலுக்கு சமூக விஞ்ஞானிகள் பலரும் வந்து சேர்ந்துள்ளனர். (ஆதாரம் : பிரன்ட்லைன், ஜுன் 26, 2015)

இதையே திராவிடர் இயக்கங்கள் கல்வி வளர்ச்சி, இலவச கல்வித் திட்டங்கள், கிராமப்புற கல்வி, இடஒதுக்கீடு, பெண்கள் மறுவாழ்வு திட்டங்கள், உணவுப் பொருள்களுக்கான உத்தரவாதம், பகுத்தறிவு, ஜாதி ஒழிப்பு, தன்னாட்சி, உள்ளாட்சி அதிகாரம் போன்ற திட்டங்களாக மக்களிடம் சேர்த்துக் கொண்டிருக்கின்றன. இலவசங்களைத் தந்து மக்களை பிச்சைக்காரர் களாக்குகிறார்கள் என்றும், பசித்தவருக்கு மீன் தரக் கூடாது; மீன் பிடிக்கக் கற்றுத் தர வேண்டும் என்றும் ஒரு தரப்பினர் ஏளனம் பேசினார்கள். திராவிட இயக்கத்தின் விளிம்பு நிலை மக்களுக்கான முதலீடும் அதிகாரப்படுத்தலுமே தமிழகத்தை வளர்ச்சிப் பாதை நோக்கி திருப்பியிருப்பதை இப்போது சமூக ஆய்வாளர்கள் பொருளாதார நிபுணர்களே ஒப்புக் கொள்கிறார்கள்.

பெருந் தொழில் நிறுவனங்களை வளர்த்தால் நாட்டின் பொருளாதாரம் செழித்து விடும் என்ற கொள்கை படுதோல்வியடைந்து நிற்பதை உலக மயமாக்கலின் தோல்வி உணர்த்தி நிற்கிறது. எனவே ‘திராவிட மாடல்’ என்ற விளிம்பு நிலை மக்களுக்கான சமூக பொருளாதார வளர்ச்சிக்கு சர்வதேச பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைகளை கேட்க முன் வந்துள்ள தமிழ்நாட்டு முதல்வர் உலகத்தின் கவனத்தையே ஈர்க்கத் தொடங்கியுள்ளார்.

## கணக்கப்பட்டு ஊராட்சியில் ஜாதி வெறித் தாக்குதல் : கழகத் தோழர்கள் முயற்சியால் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பாய்ந்தது

கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே கணக்கப்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் வனிதா பட்டியல் சமூகத்தைச் சார்ந்தவர். அவருடைய கணவர் முனைவர் அசோகன். இவருக்கும் அதே ஊரைச் சேர்ந்த பழனிச்சாமி மகன் குமார் (49) என்பவருக்கும் கிராமத்தில் பொதுக் குடிநீர் குழாய் மற்றும் பைப் லைன் போன்றவற்றை ஆக்கிரமித்தது தொடர்பாக முன்விரோதம் இருந்து வந்தது.

இந்நிலையில் 06.07.2021 காலை சுமார் 6.30 மணி அளவில் ஊராட்சி மன்றத் தலைவர் கணவர் அசோகனை , ஜாதியைச் சொல்லி இழிவுப்படுத்தி, கன்னத்தில் அறைந்து, பீர் பாட்டிலை உடைத்து இனி இந்த ஊரில் இருக்கவே கூடாது என குமார் குத்த முயன்றார். ஆபாச வார்த்தைகளால் பொதுமக்கள் மத்தியில் திட்டினார். பிறகு முனைவர் அசோகன் சிதம்பரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று திரும்பி வந்து 06/07/2021 சிதம்பரம் அண்ணாமலைப் காவல் நிலையத்தில் வழக்கு தொடர்ந்தார். சாதிய சங்க, அரசியல் பின்புலத்தால் வழக்குப் பதிவு செய்யாத சூழல் நிலவியது.

செய்தி தெரிந்தவுடன் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக மாவட்ட செயலாளர் மதன்குமார், பிரகாஷ் , ஆசிய ஜோதி ஆகியோர் அசோகனுக்கு ஆறுதலையும், ஆதரவையும் தெரிவித்து அண்ணாமலை நகர் காவல் ஆய்வாளரிடம் தொடர்பு கொண்டு பேசினர். அவர் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

08/07/2021அன்று 11 மணியளவில் காவல்துறை ஆய்வாளர் சம்பவ இடத்தில் விசாரணை நடத்தினார். பிறகு குமார் என்பவர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து கைது செய்தனர்.கணக்கப்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் வனிதா மற்றும் அவர் கணவர் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.


## ஈரோட்டில் ஸ்டேன் சுவாமி படத் திறப்பு



பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பாக, 09.07.2021 அன்று காலை 10:30 மணியளவில், ஈரோடு அரசு மருத்துவமனை மேம்பாலம் கீழ்தளத்தில் ஸ்டேன் சுவாமியின் படத்திறப்பு நிகழ்வு நடைபெற்றது.

ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி படத்தைத் திறந்து வைத்து கண்டன உரையாற்றினார். திராவிடர் விடுதலைக் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். நிகழ்விற்கு கண குறிஞ்சி தலைமை வகித்தார். மேலும், தோழமை இயக்கத் தோழர்களும் கலந்து கொண்டனர்.

## எனது சுயநலம்



எனக்கும்கூட ஒரு மாதிரியான சுயநலம் இருக்கின்றது. அது என்ன மாதிரியான சுயநலம்? இளமை முதல் இருந்துவரும் என் இயல்பின்படி, நிறைய சொத்து சம்பாதித்திருக்கிறேன். 15 இலட்சம் ரூபாய் மதிப்பிடலாம். அதில் பெருமளவு நல்ல பொதுத் தொண்டுக்கு, உதவுகிறது. எனக்கு சொந்தமான செல்வ வசதிகள் இருந்தும், என் வாழ்வு சராசரி மனிதனுடைய வாழ்வுதான். உணவுச் செலவு மாதம் 50 ரூ., உடைச் செலவு 50ரூ. ஆண்டுக்கு ஆகலாம். மாதம் 200ரூ. சம்பளத்தில் ஆட்கள் அமர்த்தாமல், அவர்கள் செய்கின்ற வேலையைச் செய்கிறவர் எனது மனைவியாக இருக்கிறார். அந்த அம்மாளுக்கும் மாதம் உணவு ரூ.50 க்குள்; உடை ஆண்டுக்கு ரூ.150 க்குள்; போகிற இடங்களில் ‘ஓசி’ பிரயாணம், ஒரு லாரி சாமானுடன், மோட்டாரில், இரவில்! மாதம் சராசரி 20 நாள் சுற்றுப்பயணம். சதா கழக வேலை, கட்டட வேலை, கழகச் செல்வத்தைப் பெருக்கிடும் வேலை, கணக்கு வைக்காமல் டயரியிலேயே குறித்துக் கொள்ளும் வேலை! சில பொறாமைக் காரர், வெந்து புழுங்குவோர் தவிர, மற்றவர்களால் நான் வெட்கப்படும் அளவுக்குப் போற்றுதல், புகழுதல், அன்பு காட்டுதல் இவற்றை நான் அனுபவிக்கிறேன் அல்லவா! இவைதான் எனக்குச் சுயநலம்.

– 84ஆம் ஆண்டு பெரியார் பிறந்தநாள் மலரில் எழுதியது

## பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை (2)

# மெக்காலே – நாத்திகர் பிராட்லா கொண்டு வந்த மாற்றங்கள்!

*கூட்டாட்சித் தத்துவத்தைக் குலைத்து ஒற்றை ஆட்சியை நோக்கிச் செல்லும் ஆபத்துகள் அரங்கேறி வருகின்றன. சட்டத்தில் இடம் பெற்றுள்ள 'ஒன்றியம்' என்ற சொற்றொடரே மனுவாதிகளுக்கு கசக்கிறது. இந்தப் பின்னணியில் பிரிட்டிஷ் இந்தியா தொடங்கி மோடி ஆட்சி வரை நடந்த மாநில உரிமைகள் தொடர்பான சுருக்கமான வரலாற்றுப் பதிவே இக்கட்டுரை.*

'சுதந்திர இந்தியா' மாநிலங்கள் வருவாயையும் உரிமைகளைப் பறித்து வருகிறது. ஆனால் 'பிரிட்டிஷ் இந்தியா' மாநிலங்களுக்கு வருவாய் தரும் துறைகளை வழங்கியது. மோடியின் பார்ப்பன 'இந்தியா', மாநிலங்களையே ஒழித்து வருகிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் 1807இல் கவர்னர் ஜெனரலாக இருந்த லிட்டன் பிரபு மாகாணங்களுக்கு வருவாய் தரும் நில வரி, எக்ஸைஸ், முத்திரை ஸ்டாம்பு போன்ற வருவாய் தரும் துறைகளை ஒதுக்கியதைக் கடந்த தொடரில் பார்த்தோம்.

அதற்குப் பிறகு அடுத்த மாற்றம் வந்தது. மாகாண அரசுகள் துறைகளில் செலவிட்டதுபோக எஞ்சிய தொகையை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மத்திய அரசிடம் ஒப்படைத்து விட வேண்டும். இதனால் சிக்கனமாக செலவிட்டு வருவாயிலிருந்து சேமித்த தொகையை மத்திய அரசு பறித்துக் கொள்வதிலிருந்து தப்பிக்க, மாகாண அரசுகள் 5 ஆண்டுகள் முடியும் காலத்தில் இறுதிப் பகுதியில் தொகை முழுவதையும் செலவிட்டன. இதனால் மத்திய-மாகாண அரசுகளுக்கிடையே மோதல்கள் உருவாயின.

இந்தப் பின்னணியில் இங்கிலாந்தில் இந்தியாவுக்கான அமைச்சராக வந்த மார்பி, மத்தியில் அதிகாரக் குவிப்பால் நிர்வாகம் முடங்கி நிற்பதை உணர்ந்து, அது குறித்து பரிசீலிக்க ஒரு ஆணையத்தை நியமித்தார். அதிகாரங்களைப் பரவலாக்குவது குறித்து ஆராய 1907இல் நியமிக்கப்பட்ட அந்த ஆணையத்தின் பெயர் 'ராயல் கமிஷன்'. கீழ்க்கண்ட கருத்துகளை பரிந்துரையாக முன் வைத்தது அந்த ஆணையம்.

1) இந்தியா போன்ற ஒரு பெரிய துணைக் கண்டத்தை ஒற்றைத் தலைநகரத்திலிருந்து நிர்வகிக்க முடியாது.

2) ஒவ்வொரு மாகாணமும் தனித்தனி மொழி, பண்பாடு, பழக்கவழக்கம் கொண்டவையாகவும் ஒரே சீரான முன்னேற்றம் இல்லாமலும் இருக்கின்றன.

3) மக்களிடம் கூடுதல் பொறுப்புகளை ஒப்படைத்து - பொது விவகாரங்களில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும்

என்ற முக்கிய பரிந்துரைகளை வழங்கியது. பரிந்துரை செய்யப்பட்டு அடுத்த இரண்டு ஆண்டுகளில் அதாவது 1909இல் சில சீர்திருத்தங்கள் சட்டமாக்கப் பட்டன. அதற்குப் பெயர்தான் மிண்டோ மார்லி சீர்திருத்தம்.

(மிண்டோ - இந்தியாவின் வைஸ்ராய் (கவர்னர் ஜெனரல்). மார்லி இங்கிலாந்தில் இருந்த இந்தியாவுக்கான அமைச்சர்)

**மாநிலங்களின் தனித்தன்மையை அங்கீகரித்தது பிரிட்டிஷ் ஆட்சி; தனித் தன்மையை ஒழித்து பார்ப்பன இந்தியா வாக்குகிறது, இந்துத்துவ ஒன்றிய ஆட்சி.**

சரி; மிண்டோ மார்லி சீர்திருத்தங்கள் வழியாகக் கிடைத்த உரிமைகள் என்ன?

- மாகாண சட்டமன்றங்களுக்கு இந்திய உறுப்பினர்களை தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கும் உரிமை முதன்முதலாகக் கிடைத்தது. (அப்போது நடந்த தேர்தலில் அனைவருக்கும் வாக்குரிமை இல்லை. நிலம் உள்ளோர், படித்தவர்கள் போன்றவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை)
- முதன்முதலாக இஸ்லாமியர்களுக்குத் தான் 25 சதவீத தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. முஸ்லீம் பிரதிநிதிகளை முஸ்லீம்கள் மட்டுமே வாக்களித்து தேர்ந்தெடுக்க தனித் தொகுதிகளும் ஒதுக்கப்பட்டன. இந்தியாவில் தனித் தொகுதி உரிமை முதலில் வழங்கப்பட்டதே இஸ்லாமியர் களுக்குத் தான். பிறகு சீக்கியர், பார்ப்பனரல்லாதார் (முகமதியர் அல்லாதார் என்பது பெயர்) ஆதி திராவிடர் தொகுதிகள் வந்தன.
- ஆளுநர்களின் நிர்வாகக் குழு விரிவாக்கப்பட்டு இந்தியர்களுக்கும் இடமளிக்கப்பட்டது.

மாகாண சட்டசபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய பிரதிநிதிகள் இடம் பெற்றதால் மத்திய அரசைத் தட்டிக் கேட்கும் துணிவைப் பெற்றனர்.

**விடுதலை இராசேந்திரன்**

அதன் காரணமாக மாகாணங்கள் தன்னெழுச்சி உணர்வு பெற்றன.

இப்போது நாம் வாழும் நாட்டுக்கு 'தமிழ்நாடு' என்ற பெயர் முதல்வராக அண்ணா இருந்தபோது சட்ட ஏற்புடன் சூட்டிய நமக்கான அடையாளம். அப்போது சுதந்திரா கட்சியிலிருந்த இராஜகோபாலாச்சாரி, 'தமிழ்நாடு' என்ற பெயரை 'தமிழ்நாட்' (Tamil Nad) என்றே பெயர் சூட்ட வேண்டும் என்று கோரிய போது அண்ணா ஏற்க மறுத்து விட்டார். 'நாடு' என்ற சொல் கட்டாயம் இடம் பெறுவதில் உறுதி காட்டினார். அதற்கு முன் 'சென்னை மாநிலம்' - அதற்கு முன் 'சென்னை மாகாணம்' அல்லது 'சென்னை இராஜதானி' என்ற பெயரையும், அதற்கு முன் 'புனித ஜார்ஜ் கோட்டை மாகாணம்' என்ற பெயரையும் தாங்கி நின்றது. 1800களில் பெரும்பாலான ஆவணங்களில் 'புனித ஜார்ஜ் கோட்டை மாகாணம்' என்றே சென்னை மாகாணம் பதியப்பட்டிருக்கிறது. ஆம்; இன்று தலைமைச் செயலகம் இயங்கும் அதே இடம் தான். 1700 முதல் 75 ஆண்டுகாலம் இந்த புனித ஜார்ஜ் கோட்டையே ஆங்கிலேயர்களின் தலைநகரமாக இருந்தது. சென்னைக்குப் பிறகு தான் கல்கத்தா தலைநகரமானது. சென்னைக் கோட்டைக்குள் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகள்தான் அன்றைய ஆளுநர்களின் அலுவலகமும் வீடும்.

- 'சுதந்திர தேசிய இந்தியா' – மாநிலங்களின் உரிமைகளைப் பறித்தது; 'மனுவாத பார்ப்பன' இந்தியா மாநிலங்களையே அழித்து வருகிறது.
- இலண்டன் நாடாளுமன்றம் மாகாண உரிமைகளைப் பறித்தபோது எதிர்த்து குரல் கொடுத்தவர்கள் பிரிட்டிஷ் அதிகாரிகள்
- தனித் தொகுதி உரிமையை முதன்முதலாகப் பெற்றவர்கள் இஸ்லாமியர்கள். அவர்கள் இப்போது அனைத்து உரிமைகளையும் பறி கொடுத்து நிற்கிறார்கள்.
- கடவுள் பெயரால் உறுதி ஏற்க மறுத்து பதவியை தூக்கி வீசியவர் பிராட்லா.

இங்கே 1910இல் சட்டமன்ற மண்டபம் கட்டப் பட்டது.

### நன்றி கூறப்பட வேண்டிய 3 அதிகாரிகள்

**இந்தியாவை சுரண்டுவதற்குவந்தவர்கள்தான் பிரிட்டிஷ்காரரர் என்பது உண்மைதான். ஆனால் வெகு மக்களை சுரண்டிக் கொழுத்தப் பார்ப் பனர்களைவிட அவர்களிடம் மனிதாபிமானம் இருந்தது என்பதை மறுக்க முடியாது. இது குறித்து மூன்று பிரிட்டிஷ் அதிகாரிகளை நாம் நன்றியுடன் நினைவு கூர வேண்டும்.**

மெக்காலே என்ற பிரிட்டிஷ் அதிகாரிதான் சட்டமன்றம் என்ற அமைப்பை உருவாக்க வேண்டும் என்று முதலில் சிந்தித்தவர். அவர் உருவாக்கித் தந்த 'கரு' தான் சட்டமன்றம். கல்கத்தா- மாகாண தலைமை யகத்தில் கவர்னர் ஜெனரலாக பெண்டிங் இருந்த போது அவரது நிர்வாகக் குழுவில் சட்ட அறிஞர் என்ற அடிப்படையில் இடம் பெற்றவர்தான் மெக்காலே.

சென்னை-பம்பாய் மாகாணங்களின் அதிகாரங்களைப் பிடுங்கி கல்கத்தா மாகாண ஆட்சியிடம் சரணடைய வைக்கும் சட்டம் ஒன்று 1833இல் பிரிட்டன் நாடாளுமன்றத்தில் வந்தது. அந்தப் பிரச்சினையை பிரிட்டன் நாடாளுமன்றம் ஆய்வுக்கு எடுத்த போது அதை உரத்த குரலில் எதிர்த்தவர் தான் மெக்காலே.

"நம்மில் யாரும் எவ்வளவு பெரிய ஜனநாயக வாதியாக இருந்தாலும், எவரும் இந்தியருக்கு பிரதிநிதித்துவம் வழங்கக் கூடிய அரசாங்கத்தை தர மறுக்கிறோம்; இது நியாயமல்ல. இந்தியாவில் அந்த மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு அரசியல் அமைப்பை நாம் உருவாக்கித் தர வேண்டும்" என்று ஓங்கி ஒலித்தார். மெக்காலேவிடம் இந்த சிந்தனையை விதைத்தவர் ஜேம்ஸ் மில். அவர் இந்திய வரலாற்றை எழுதிய வரலாற்றாளர்.

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றங்கள்தான் கொடுங்கோல் ஆட்சியிலிருந்து மக்களை விடுவிக்கும். அப்போதுதான் மக்களின் மகிழ்ச்சியான வாழ்க்கை உறுதியாகும்" என்றும், "ஒரு சுதந்திரமான ஆட்சியைக் கொடுக்காவிட்டாலும் குறைந்தது ஒரு நல்லாட்சியையாவது அமைத்திட வேண்டும்" என்று பிரிட்டிஷாரின் மனசாட்சியையே உலுக்கியவர் ஜேம்ஸ் மில். இந்த நியாயத்தின் குரல் தான் மெக்காலேயின் மனசாட்சியையும் திறக்க வைத்தது பிரிட்டிஷ் நாடாளுமன்றம்! சட்டமன்றம் ஒன்றை உருவாக்க வேண்டியதன் நியாயத்தை உணர்ந்தது. அதை செயல்படுத்த பிரிட்டிஷ் மன்னரின் தூதுவராக இந்தியாவுக்கு வந்தார் மெக்காலே. 1834ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் நாள் சென்னை கடற்கரையில் வந்து இறங்கினார். அடுத்த 15 நாட்களிலேயே ஜூன் 25இல் சென்னை மாகாண அரசு உதயமானது. அதே நாளில் பம்பாய் மாகாண அரசும் அமைக்கப்பட்ட செய்தி சென்னை அரசிதழில் வெளியானது. அரசு, அரசமைப்பு, சட்டம், சட்டமன்றம் ஆகிய நான்கு கட்டமைப்பும் உருவாகக் காரணமாக இருந்தவர் மெக்காலே.

பிரிட்டிஷ்காரன் இந்தியாவை மட்டும் உருவாக்க வில்லை; மாகாணங்களையும், சட்டசபைகளையும் கூட அவன்தான் உருவாக்கினான் என்பதை 'சங்கிகள்' புரிந்து கொள்ள வேண்டும்.

வேதம் படிப்பது ஒன்று மட்டுமே கல்வியாக இருந்த சமூகக் கொடுமையை ஒழித்து அனைவருக்குமான கல்வித் திட்டத்தை உருவாக்கியவரும் மெக்காலே தான். மனுசாஸ்திர அடிப்படையில் குற்றங்களுக்கான தண்டனை இருந்தது. அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட அநீதிகளுக்கு முற்று புள்ளி வைத்து அனைத்து பிரிவு மக்களுக்கான, பொது கிரிமினல் சட்டத்தையும் கொண்டு வந்தவர் மெக்காலே தான்! அதற்கு முன் மனுசாஸ்திர அடிப்படையில் பார்ப்பன புரோகிதர் ஆலோசனை பெற்று 'சூத்திரருக்கு' ஒரு தீர்ப்பும் 'பிராமணனுக்கு' ஒரு தீர்ப்புமே வழங்கப்பட்டு வந்தன.

வேதம் படிப்பதே கல்வி என்ற முறையை மாற்றி அனைவருக்கும் பொதுக் கல்வி முறையைக் கொண்டு வந்தவரும் மெக்காலேதான். ஆர்.எஸ்.எஸ். சங்கி களுக்கு 'மெக்காலே' என்ற பெயரையே வெறுப்பதற்கு முக்கியக் காரணம் இவை தான்.

மெக்காலே சட்டமன்றங்களை உருவாக்க வேண்டும் என்றார் என்றால், அப்படி அமைக்கப் படும் சட்டமன்றங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப் படும் பிரநிதிகள் வழியாகவே செயல்பட வேண்டும் என்று பிரிட்டன் நாடாளுமன்றத்தில் (காமன்ஸ் சபை) முதன்முதலாக சட்டம் கொண்டு வந்தவர் சார்லஸ் பிராட்லா என்ற பிரிட்டிஷ்காரர்தான். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கேள்வி கேட்கும் உரிமையும் வேண்டும் என்று சட்ட முன் வரைவுகளை நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தவரும் அவர்தான்.

பிராட்லா யார்? உலகப் புகழ் பெற்ற நாத்திகர். அவரது நாத்திகக் கருத்துகளைக் கேட்க அரங்கு கூட்டங்களுக்கு கட்டணம் செலுத்தி பார்வை யாளர்கள் வந்தார்கள். பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி ஏற்பை கடவுளின் பெயரால் ஏற்கவேண்டும் என்ற விதியை ஏற்க மறுத்து, தேர்தலில் வெற்றி பெற்ற நிலையிலும் நாடாளுமன்றத்துக்குள் செல்ல மறுத்தார். 'உளமாற உறுதி ஏற்கிறேன்' என்றுதான் கூறுவேன்; நான் நம்பாத கடவுள் மீது உறுதி ஏற்க மாட்டேன் என்று கூறினார். நாடாளு மன்றம் ஏற்க மறுத்தது. அதற்காக நீதிமன்றம் பிராட்லாவுக்கு தண்டனை வழங்கியது. நாடாளு மன்ற பதவியையும் பறித்தது. அதன் பின் தொடர்ந்து நடைபெற்ற 4 மறு தேர்தல்களிலும் பிராட்லாவே வெற்றி பெற்றார். குற்றக் கூண்டுக்கு வர மறுத்தார் பிராட்லா. வலுக்கட்டாயமாக சிறையில் அடைத்தனர். பிரச்சினை பேரரசியின் கவனத்துக்குப் போனது. அரசி, பிராட்லாவை விடுதலை செய்ய உத்தரவிட்டார். அதன் பிறகு விதிமுறைகளும் திருத்தப்பட்டன. கடவுள் பெயரால் உறுதி எடுக்க விரும்பாதவர்கள், உளமாற உறுதி ஏற்கலாம் என்ற உரிமை கிடைத்தது, பிராட்லா தொடர்ந்த வழக்கில்தான்! நாடாளுமன்றத்தின் முடிவுகளில் நீதிமன்றம் தலையிடாது என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பும் இந்த வழக்கின் மூலம் தான் கிடைத்தது. இன்று வரை நாடாளுமன்ற உரிமைகளில் நீதிமன்றம் தலையிட முடியாது என்ற நிலை நீடிக்கிறது. அந்த உரிமையைப் பெற்றுத் தந்தவர் பிராட்லா.

அந்த நாத்திக மரபின்படி தான் தி.மு.க. 'உளமாற' என்று இப்போதும் உறுதி ஏற்கிறது.

மற்றொரு ஆளுநர் சார்லஸ் டிரெவெல்சன் அவர் குறித்து அடுத்த இதழில் பார்ப்போம்.

(தொடரும்)

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 15.07.2021**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY   TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21  LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM   REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## ஸ்டேன் சுவாமி மரணம் – நிறுவனப் படுகொலை

# ‘உபா’ அடக்குமுறை சட்டத்தை இரத்து செய் – சென்னையில் கண்டன ஆர்ப்பாட்டம்

***அருட்தந்தை ஸ்டேன் சுவாமியை பாசிச பாசக அரசும் நீதித்துறையும் நிறுவனப் படுகொலை செய்ததைக் கண்டித்து தமிழ்த்தேச மக்கள் முன்னணி, மக்கள் அதிகாரம், திராவிடர் விடுதலைக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மா–லெ) செந்தாரகை, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம் ஆகிய அமைப்புகளின் ஒருங்கிணைப்பில் 8–7–2021 வியாழன் காலை 11 மணி அளவில் வள்ளுவர் கோட்டத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.***

இவ்வார்ப்பாட்டத்தில், பீமா கோரேகான்உபா (UAPA) பொய் வழக்கை திரும்பப் பெற வேண்டும், அவ்வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள மனித உரிமை செயற்பாட்டாளர்கள் 14 பேரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், உபா (UAPA) உள்ளிட்ட அடக்குமுறைச் சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும், தேசிய புலனாய்வு முகமை (NIA) யைக் கலைத்திட வேண்டும் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இவ்வார்ப்பாட்டத்திற்கு தமிழ்த்தேச மக்கள் முன்னணியைச் சேர்ந்த செந்தில் தலைமையேற்றார். திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச்செயலாளர் விடுதலை இராஜேந்திரன், மக்கள் அதிகாரத்தின் சென்னை மண்டல ஒருங்கிணைப்பாளர் அமிர்தா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி(மா-லெ) செந்தாரகையைச் சேர்ந்த திவ்ய பாரதி, தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத்தின் தலைமைக் குழு உறுப்பினர் மகிழன், பாப்புலர் ஃப்ரண்ட ஆப் இந்தியாவின் மாவட்டத் தலைவர் அபுபக்கர் சாதிக், தந்தைப் பெரியார் திராவிடர் கழகத்தைச் சேர்ந்த ஆவடி நாகராசன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் தலைமைக் குழு வாலாசா வல்லவன் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் பொறுப்பாளர்கள் கணடன உரையாற்றினர். சுமார் 60 பேர் வரை இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு முழக்கங்களை எழுப்பினர்.

அருட்தந்தை ஸ்டேன் சுவாமி தன்னுடைய 84ஆவது அகவையில் உபா அடக்குமுறைச் சட்டத்தின் கீழ் சிறைப்படுத்தப்பட்ட நிலையில் கடந்த ஜூலை 5 ஆம் நாள் மாரடைப்பால் உயிரிழந்தார். முன்னதாக சிறையில் இருக்கும்போது கொரோனா நோய்த் தொற்றுக்கு அவர் ஆளாகியிருந்தார். நாடறிந்த பீமா கோரேகான் பொய் வழக்கில் ஸ்டேன் சுவாமியின் பெயரும் சேர்க்கப்பட்டு மாவோயிஸ்ட் கட்சிக்கு நிதியுதவி செய்தார், இந்த அரசாங்கத்தை தூக்கி எறிய திட்டமிட்டார் போன்ற பற்பல குற்றச்சாட்டுகள் இவர் மீது சுமத்தப்பட்டன. தன் வாழ்நாளின் கடைசி எட்டு மாதங்களை அவர் மும்பை சிறையில் கழிக்க வைக்கப்பட்டார்.

திருச்சியில் பிறந்து பிலிப்பைன்சிலும் பெல்ஜியத்திலும் பட்டப்படிப்பு முடித்து பெங்களூரில் உள்ள சமூகவியல் நிறுவனத்தில் இயக்குநராக 20 ஆண்டுகள் பணியாற்றி, 1990இல் இருந்து ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடி மக்களுக்காக அரும்பாடுபட்டவர்தான் ஸ்டேன். இந்தியாவில் உள்ள கனிமவளங்களில் 40% ஜார்கண்டில் உள்ளது. கனிம வளச் சுரங்கங்கள், அணைகள், சிறுநகரங்கள் எனப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் பெயரால் பழங்குடிகள் இடம்பெயர்க்கப்பட்டனர்.

அவர்களுக்கு உரித்தான காடுகளும் காட்டில் உள்ள கனிம வளங்களும் கார்ப்பரேட்களால் கொள்ளையடிக்கப்பட்டன. இது போன்ற திட்டங்களை அமலாக்குவதற்கு முன், பழங்குடி கிராம சபைகளின் கருத்தறிய வேண்டும் என்று சொல்லும் PESA சட்டத்தை நடைமுறைப்படுத்த ஸ்டேன் சுவாமி பாடுபட்டார். அரசமைப்பு சட்டத்தின் 5ஆவது பட்டியலில் சொல்லப்பட்டுள்ள படி பழங்குடிகளே உறுப்பினர்களாக இருந்து நிர்வகிக்கும் ‘பழங்குடி ஆலோசனைப் பேரவைகள்’ ஏன் அமைக்கப்படவில்லை? என்று கேள்வி எழுப்பினார். பழங்குடிகளின் ஒப்புதல் இன்றி அவர்களிடம் இருந்து பிடுங்கப்பட்ட நிலங்களுக்காக இழப்பீடு கேட்டுப் போராடச் செய்தார். வளர்ச்சித் திட்டங்களின் பெயரால் இடம்பெயர்க்கப்பட்டவர்களின் உரிமைகளுக்காக ஓர் அமைப்பை உருவாக்கினார். பழங்குடிகளின் அரசியல் சட்ட உரிமை, நிலவுரிமை, மனித உரிமை ஆகியவற்றுக்காக அரும்பாடுபட்டார். தங்களுக்காக உழைத்ததால் அந்தப் பழங்குடி மக்களால் ‘அப்பா’ என்று அவர் அன்போடு அழைக்கப்பட்டார்.

பழங்குடி மக்களில் ஏராளமானோர் ’மாவோயிஸ்ட்கள்’ என்று பொய்யாக குற்றஞ்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அப்படி சிறையில் அடைக்கப்பட்ட 3000 பேர் மீதான வழக்குகளை உயர்நீதிமன்றத்தில் கேள்விக்குள்ளாக்கினார்.

ரிலையன்ஸ் குழுமத்தின் அம்பானி, வேதாந்த குழுமத்தின் அனில் அகர்வால் உள்ளிட்ட பல்வேறு கார்ப்பரேட் முதலாளிகளின் கனிம வளக்கொள்ளைக்கு தடையாக இருந்ததுதான் அருட்தந்தை ஸ்டேன் சுவாமி இத்தனை வன்மமாக கொலை செய்யப்படுவதற்கு காரணமாகும்.

பீமா கோரேகான் வழக்கில் மொத்தம் 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதில் கடைசியாக கைது செய்யப்பட்டவர் அருட்தந்தை ஸ்டேன் சுவாமி. மனித உரிமைக் காப்பாளர் சுதா பரத்வாஜ், கவிஞர் வரவர ராவ், அறிஞர் ஆனந்த் டெல்டும்டே, செயற்பாட்டாளர் ரோனா வில்சன், வழக்கறிஞர் அருண் ஃபெரைரா, பேராசிரியர் சோமா சென், மனித உரிமைக் காப்பாளர் கௌதம் நவ்லாகா, வழக்கறிஞர் சுரேந்திர காட்லிங், தொழிற்சங்க செயற்பாட்டாளர் வெர்னான் கன்சல்வேஸ், பேராசிரியர் ஹனி பாபு, நிலவுரிமைச் செயற்பாட்டாளர் மகேஷ் ராவத், கவிஞர் சுதிர் தவாலே, கலைஞர்கள் ரமேஷ் கைச்சார், ஜோதி ஜாக்டாப், சாகர் கோர்கே ஆகியோர் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக மும்பையில் உள்ள தலோஜா சிறையில் வாடி வருகின்றனர்.

இவர்கள் மீதான மிக முக்கிய குற்றச்சாட்டு ‘இவர்கள் பிரதமர் மோடியைக் கொலை செய்ய திட்டமிட்டனர்’ என்பதாகும். அதற்கான சான்றுகளை, மின்னஞ்சல் பரிமாற்றங்களை இவர்களது கணிணியில் இருந்து எடுத்ததாக என்.ஐ.ஏ. சொல்கிறது. ஆனால், இதில் கைது செய்யப்பட்டுள்ள ரோனா வில்சனின் கணிணியில் அவருக்கே தெரியாமல் உளவு நிறுவனங்கள் செயலியின் மூலம் அவரது கணிணியில் திணித்தவைதான் அந்த சான்றுகள் என்பதை ஆர்செனல் என்ற அமெரிக்க ஆய்வு நிறுவனம் கண்டுபிடித்து அறிக்கை கொடுத்துள்ளது. மோடியைக் கொலை செய்ய திட்டம் தீட்டியதாக கணினியில் இடம் பெற்றிருந்த மின்னஞ்சல் பதிவுக்குப் பயன்படுத்தப்பட்ட ‘ஆப்’ - வில்சன் பயன்படுத்தப்பட்ட போது உருவாக்கப்பட்டதில்லை. பிறகு தான் புதிதாக உருவாக்கப்பட்டது. வில்சன் பயன்படுத்திய ‘தொடு பெறி’ (கி போர்டு) ‘மவுஸ்’ அம் மின்னஞ்சல் திணிக்கப்பட்ட



போது பயன்படுத்தியதும் வெவ்வேறானவை. மோடி கொலை திட்டம் குறித்த மின்னஞ்சலை வில்சன் திறந்து பார்க்கவே இல்லை. முதன்முதலாக திறந்த புலனாய்வுத் துறைகள் என்று கண்டறியப்பட்டது. ஆனால், இதை கருத்தில் எடுத்து பிணைக் கொடுக்க மறுக்கிறது நீதிமன்றம்.

முன்னதாக நோய்வாய்ப்பட்டிருந்த கவிஞர் வரவர ராவுக்குப் பிணை பெறுவதற்கு பெரும்பாடு பட வேண்டியிருந்தது. கிட்டத்தட்ட குற்றுயிரும் குலையுயிருமாக்கப்பட்ட நடைபிணம் போல் வரவரராவ் சிறையில் இருந்து வெளியே வந்தார்.

அருட்தந்தை இரு செவிகளும் கேட்கும் திறன் இழந்தவர், நடுக்குவாத நோய்க்கு ஆளானவர். அவரால் ஒரு குவளையைக்கூட கையில் பிடித்து நீர் அருந்த முடியாது. இதற்காக அவர் சிறை நிர்வாகத்திடம் உறிஞ்சுக் குழல் கொண்ட குவளை கேட்டார். ஆனால், சிறை கண்காணிப்பாளர் கௌஷ்துப் குர்லேகர் அதைக்கூட கொடுக்க மறுத்தார். உறிஞ்சுக் குழலுக்கு நீதிமன்றத்தை அணுக வேண்டிய நிலைக்கு ஸ்டேன் தள்ளப்பட்டார். என்.ஐ.ஏ. நீதிமன்றத்தில் என்.ஐ.ஏ அதிகாரிகள் ‘உறிஞ்சுக் குழல் இல்லை’ என்று பதிலளித்தனர். பின்னர் பிப்ரவரியில் கொரோனா இரண்டாம் அலை வந்தபோது என்.ஐ.ஏ. நீதிமன்றத்தை அணுகி பிணை கேட்டார் ஸ்டேன். தலோஜா சிறை அதிகமான கைதிகளைக் கொண்ட கூட்ட நெரிசல் மிக்க சிறை. தொற்றுப் பரவலுக்கு அதிக வாய்ப்புகளைக் கொண்ட சிறை. கொரோனா தொற்று அபாயமும அது தீவிரப்படுவதும் 60 அகவைக்கு மேல் இருப்போருக்கு உண்டு என்பதால் முதியவர்களை வீட்டை விட்டே வெளியே வரவேண்டாம் என்று அரசு ஒருபக்கம் அறிவுறுத்திக் கொண்டிருக்கும்போது ஸ்டேனுக்குப் பிணை மறுத்தது என்.ஐ.ஏ. நீதிமன்றம். பின்னர் உயர்நீதிமன்றத்தை அணுகி மருத்துவ தேவைக்காக பிணை கேட்டார் ஸ்டேன். தான் வெகுகாலம் வாழப் போவதில்லை, தன்னுடைய கடைசி காலத்தை தான் மக்களுடன் கழிக்க விரும்புவதாக நீதிமன்றத்தில் அவர் முறையிட்டார். சிகிச்சைக்காக அவருக்கு உயர்நீதிமன்றம் பிணை கொடுத்தது.

பிணை கிடைத்து வெளியே வந்த பிறகு அவருக்கு பரிசோதனை செய்த போது கொரோனா தொற்று இருப்பது தெரிய வந்தது. மருத்துவமனையில் உயிருக்குப் போராடியபடி இருந்தவர் ஜூலை 5ஆம் நாள் மாரடைப்பால் மாண்டார். கிடைக்கும் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி அருட்தந்தை ஸ்டேன் சுவாமியை சித்திரவதை செய்த சிறைக் கண்காணிப்பாளர் கௌஷ்துப் குர்லேகர் மீதும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் மீதும் நடவடிக்கை கோரி பீமா கோரேகான் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்போர் முழுநாள் பட்டினிப் போராட்டம் நடத்தினர்.

ஐநாவின் மாந்த உரிமைகளுக்கான உயர் ஆணையர் அலுவலகம், மனித உரிமைக் காப்பாளர்களுக்கான ஐ.நா.வின் சிறப்பு பிரதிநிதி மேரி லாவ்லர், மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்பு பிரதிநிதி ஈமான் கில்மோர் , ஜெர்மனியின் மனித உரிமை கொள்கைகளுக்கான ஆணையர் பார்பல் கொஃப்லர் ஆகியோர் அருட்தந்தை ஸ்டேன் சுவாமியின் சாவு குறித்து கவலை தெரிவித்துள்ளனர். அவர் விசயத்தில் தாம் சட்டப்படி நடந்து கொண்டதாக இந்திய வெளியுறவுத் துறையின் செய்தி தொடர்பாளர் அரிண்டம் பாகெயி உலகை ஏமாற்ற முயன்றுள்ளார்.

காவி-கார்ப்பரேட் பாசிச அரசின் நிறுவனங்களான தேசிய புலனாய்வு முகமை (NIA), சிறை நிர்வாகம், நீதிமன்றம் என எல்லாம் சேர்ந்து நிகழ்த்திய பச்சைப் படுகொலை இது.

காந்தியாரை ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தைக் கொண்ட கோட்சே சுட்டுக் கொன்றார். தமது சித்தாந்த எதிரிகளைக் கொல்வது ஆர்.எஸ்.எஸ்.இன் வழமையான உத்தி. கல்புர்கி, தபோல்கர், பன்சாரே, கௌரி லங்கேஷ் போன்றவர்கள் ஆர்.எஸ்.எஸ்.இன் துணை அமைப்புகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இப்போது துப்பாக்கிக் குண்டுகளைப் பயன்படுத்தாமல் நீதிமன்றத்தையும் என்.ஐ.ஏ. வையும் தன்னுடைய துணை அமைப்பாகப் பயன்படுத்தி மக்களுக்கு அரணாக உழைத்த அறிஞர் பெருமக்களை சிறையில் அடைத்து மெல்ல மெல்ல சாகடித்து வருகிறது ஆர்.எஸ்.எஸ்.

இதை இனியும் அனுமதிக்க முடியாது. பீமா கோரேகான் பொய் வழக்கை திரும்பப் பெற வேண்டும், சிறையில் வாடும் 14 தோழர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், உபா உள்ளிட்ட அடக்குமுறை சட்டங்களைத் திரும்பப் பெற வேண்டும், என்.ஐ.ஏ. வைக் கலைக்க வேண்டும் ஆகிய கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தின் வாயிலாக முன்வைக்கிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP    Posted: 15th July 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN